# நூலக நிறுவன வேலைவாய்ப்பு

## எண்ணிம நூலக மீதரவு அலுவலர் - Digital Library Officer- Metadata Enrichment

நூலக நிறுவனம்

நூலக நிறுவனமானது (www.noolahamfoundation.org) இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகள், மரபுரிமைகளை ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை செயற்படும் இலாப நோக்கமற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஆகும்.

2005 முதல் இலங்கையின் முதன்மையான தமிழ் எண்ணிம ஆவணக் காப்பகமாகத் திகழும் நூலக நிறுவனம் இதுவரை பல்வேறு செயற்றிட்டங்களூடாக 140,000 க்கும் அதிகமான ஆவணங்களை எண்ணிம வடிவங்களில் பதிவு செய்துள்ளது. நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், பிரசுரங்கள், ஏட்டுச் சுவடிகள், அழைப்பிதழ்கள், கடிதங்கள், கையெழுத்துப் பிரதிகள், ஒலிப்பதிவுகள், நிகழ்படங்கள், வாய்மொழி வரலாறுகள் போன்ற சகலவிதமான ஆவணங்களையும் நூலக நிறுவனம் பதிவுசெய்து வருகிறது. அவ்வகையில் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான முதன்மையான உசாத்துணைத் திரட்டினை நூலக நிறுவனம் உருவாக்கியுள்ளது.

**JOB DESCRIPTION**

| | |
|---|---|
| **Job Title -** பணித் தலைப்பு | எண்ணிம நூலக மீதரவு அலுவலர் / Digital Library Officer-Metadata Enrichment |
| **Grade/**தரம் | C5 |
| **Reports To -** அறிக்கையிடல் | எண்ணிம நூலக முகாமையாளர் / Digital Library Manager |
| **Base Location -** பணி இடம் | நூலக அலுவலகம் யாழ்ப்பாணம் |
| **Type -** பணி வகை | முழு நேரம், மாத சம்பளம் |
| **Period of Assignment -** பணிக் காலம் | ஒரு ஆண்டு (மூன்று மாதம் தகுதிகாண் காலம் உட்பட ) தகைமை மற்றும் நிறுவன தேவைக்கேற்ப நீடிப்புக்கான வாய்ப்புக்கள் உள்ளன. |
| **Date of Duty Assignment -** தொடக்க திகதி | உடனடியாக |

**JOB SUMMARY**

நூலகம் மற்றும் ஆவணக வலைத்தளத்தில் இணைக்கப்பட்ட அனைத்து ஆவணங்களினதும் மீதரவுகள் நூலக தரநிலைகளுக்கேற்ப இணைக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். மற்றும் பார்வையாளர்கள், ஆய்வாளர்களுக்கு தேவையான தகவல்கள் வலைத்தளத்தில் சரியாக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

கடைமைகளும் பொறுப்புக்களும்

1. ஆவணக வலைத்தளத்தில் ஆவணங்களை பதிவேற்றத் தொடங்கிய காலத்திலிருந்தான ஆவணக வலைத்தளத்தில் பதிவேற்றிய ஆவணங்களின் மீதரவுகளை (ஆவணத்தின் தலைப்பு, ஆசிரியர், பதிப்பாளர், குறிப்பு, ஆண்டு, மொழி, மற்றும் குறிச்சொல்) ஆகியவற்றை இற்றைப்படுத்தல் வேண்டும்.

2. நூலக வலைத்தளத்தில் இணைக்கப்பட்ட நூலக எண்களைக் கொண்ட அச்சு ஆவணங்களின் Article Title, PDF Link, OCR Link, Cover Page, Ulladakkam, Author, Category, Language, Publisher, Year, Pages, Rights, Rights Status, Piranthiyam & Projects போன்ற அனைத்து மீதரவுகளும் சரிபார்க்கப்பட்டு நூலக வலைத்தளத்தில் திருத்தப்படல் வேண்டும்.

எண்ணிம நூலக மீதரவு அலுவலர் தேவைப்படும் தகுதிகள்

1. கணினி அறிவியல், அல்லது தொடர்புடைய துறையில் பட்டம் / டிப்ளோமா தேவை.
2. நூலக டிப்ளோமா கற்கை அல்லது அதற்கு சமனான கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல்
3. கணனி, இணையத்தளங்களை பயன்படுத்தும் அறிவும் அனுபவமும் (NVQ Level 4)
4. சிறந்த எழுத்து மற்றும் வாய்மொழி தொடர்பு திறன்
5. வாசிப்பு மற்றும் நூல்கள் சார்ந்த அக்கறையும் அனுபவமும் இருத்தல்
6. நூலகம் மற்றும் காப்பகப்படுத்தல் அனுபவம்
7. ஆவணங்கள் சார்ந்த பதிப்புரிமைகள் தொடர்பான அறிவு